DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : CC. 116/2012 | Taluk | : |
| Deposition of Witness for | : PW-8 | Calling | : |
| Name | : மருத்துவர். பூங்கொடி | Religion | : |
| Father / Husband Name | : சண்முகசுந்தரம் | Age | : |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 12th February 2026.

---

**(1-வது எதிரி ஆஜர், 3, 4 எதிரிகள் இறந்துவிட்டார்கள்).**

**(2, 5 எதிரிகள் ஆஜரில்லை. BNSS பிரிவு 355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**(சாட்சி காணொளி காட்சியின் மூலம் சாட்சியம் அளிக்கிறார்)**

**முதல் விசாரணை:-**

1) நான் மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.03.2012-ம் தேதி நான் மேற்படி மருத்துவமனையில் மருத்துவராக பணியில் இருந்த சமயம் சிவகங்கை அரசு மருத்துவமனையில் இருந்து மேல் சிகிச்சைக்காக தலைக்காயத்துடன் வந்த சுமார் 50-வயதுடைய லெட்சுமி என்பவரை நான் உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவருக்கு வலதுகையில் கண்றியகாயம் மற்றும் தலையில் வெட்டுகாயத்துடன் வந்தவருக்கு சிகிச்சை அளித்தேன். அவருக்கு நான் சிகிச்சை அளித்தற்கான கேஸ்-சிட் பல வருடங்களுக்கு முன்புள்ளது என்பதால் ஆவண காப்பகத்தில் முழுமையான கேஸ் History சிட் இல்லை. ஆனால் லெட்சுமிக்கு தலையில் ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என நான் சான்று வழங்கியுள்ளேன். அதன் பதிவுகள் ஆவணகாப்பகத்தில் உள்ளது. என்னிடம் காட்டப்படும் சான்று நான் வழங்கியது தான். சாட்சி லெட்சுமியின் காயச்சான்று **அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

1) நான் மேற்சொன்ன காயங்கள் அந்த நபர் நிலை தடுமாறி கீழே விழுந்தால் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.1,
சிவகங்கை.